அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 01/95

எனது இல.11/2/9/170(எச்)75/15
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07.
1995, ஜனவரி மாதம் 13 ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

தேர்தல்களில் போட்டியிடுவதற்காக அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 44/90 இன் கீழ் ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்கள்.

1994 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக 1990.10.18 ஆந் திகதிய 44/90 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி ஓய்வு பெற்ற அலுவலர்கள் பின்வரும் நிபந்தனைகளை நிறைவேற்றுமிடத்து மீண்டும் சேவையில் அமர்த்தப்படலாம்.

(அ) அவர்கள் தாபனக் கோவையின் xxxII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின்படி அரசியல் உரிமைகளைப் பயன்படுத்துவதற்கு உரித்து அல்லாத அலுவலர்கள் வகுதிக்கு உட்படும் அரச அலுவலர்களாக இருக்க வேண்டும்;

(ஆ) போதியளவு முன்னுரிமை வாக்குகளின் எண்ணிக்கையை பெற்றுக் கொள்ள முடியாத காரணத்தால் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட முடியாதவர்களாக இருக்க வேண்டும்.

(இ) மீண்டும் சேவையில் அமர்த்துமாறு அவர்களால் விண்ணப்பம் செய்யப்பட்டிருக்க வேண்டும், அத்துடன்

(ஈ) அவர்கள் ஓய்வு பெறுவதற்கு விருப்பம் தெரிவிக்கும் வயதிலும் குறைந்த வயதினராய் இருக்க வேண்டும்.

02. அவ்வுத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்ற திகதி முதல் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்ட திகதி வரை இடைப்பட்ட காலத்துக்கு உழைத்துக் கொண்ட விடுமுறை வழங்கப்படலாம். அத்துடன் எஞ்சிய சமுகமளிக்காத காலப்பகுதி சம்பளமற்ற விடுமுறையாகக் கொள்ளப்பட வேண்டும்.

03. இவ் உத்தியோகத்தர்கள் 44/90 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி உண்மையாக ஓய்வு பெற்றார்கள் என்பதற்கும் தேர்தலில் போட்டியிட்டார்கள் என்பதற்கும் ஏற்றுக் கொள்ளத்தக்க சாட்சியங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

04. இச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 1991 ஆம் ஆண்டின் உள்ளூராட்சித் தேர்தலுக்கும் 1993, 1994 ஆம் ஆண்டுகளின் மாகாண சபைத் தேர்தல்களுக்கும் பிரயோகிக்கப்படலாம்.

ஒப்பம்: ஆர். எஸ். ஜயரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.